# இரட்சிப்பு
## RATCHIPPU

RATCHIPPU = SALVATION


Volume-13 | November - 2023 | Issue-06

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-





இயேசு: குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களை தடுக்காதீர்கள். குழந்தைகளைப் போன்றோர் கடவுள்–ராஜ்யத்தை சேர்ந்தவர்கள். மாற்–10:14



## இயக்குநர் கடிதம்... From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

அனைவருக்கும் எங்கள் அன்பின் நல்வாழ்த்துக்கள்.

திருச்சபை இறைமக்கள் நம் குடும்பங்கள் மற்றும் திருச்சபையிலுள்ள சிறுபிள்ளைகள் அனைவருக்கும் இனிய குழந்தைகள் தின நல்வாழ்த்துக்கள். இம்மாத இறுதியில் ஐந்து மாநில தேர்தல்கள் மற்றும் அடுத்த ஆண்டின் முதற்பகுதியில் பாராளுமன்ற தேர்தலை சந்திக்கிறது இந்தியா. நம் தாய்-திருநாடு வளரவும் உயரவும் பாடுபடும் தலைவர்கள் ஆட்சியாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட ஜெபிக்கவும், உழைக்கவும் போராடவும் நம்மை அர்ப்பணிப்போம்.

இனவெறி, மதவெறி மற்றும் வன்முறை கொள்கைகளுக்கு துணைபோகும் அரசியல் தலைவர்கள் மனந்திரும்பவும், சிறப்பாக, தமிழ்நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மைக்காகவும் ஜெபிப்போம்.

'ஜெப-ஜன்னல்' ஜெப-நேரங்களில் (நவம்பர் 10, 17, 24 தேதிகள்) இணைந்து ஜெபிக்கவும், 'அனைவரும்-ஊழியத்தில்' - என்ற நமது கைபிரதி ஊழிய திட்டத்தில் இணையவும், இரட்சிப்பு வேதாகம போட்டிகளில் பங்குபெறவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

'இரட்சிப்பு' பத்திரிக்கை ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் உள்ளிட்ட நமது இயக்குநர் அவர்களின் இம்மாதத்தின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்திடவும் பங்குபெறவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம். வேதாகமப் போட்டிக்கான பதில்கள், ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம்: பக்கம் 9-ல் தரப்பட்டுள்ளது).

தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-155** **மாற்கு - 10:14**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| | |
|---|---|
| **சத்திய வேதம் (ரேனியஸ்-1840)** | **பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)** |
| இயேசுவானவர் அதைக்கண்டு விசனம் அடைந்து: பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு தடை பண்ணாமல் இடங்கொடுங்கள்; பராபரனுடைய இராச்சியம் அப்படிப்பட்டவைக்கு உடைமையானதே என்றார். | இயேசு அதைக்கண்டு விசனமடைந்து: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்றார். |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| இயேசு இதைக்கண்டு கோபம் கொண்டு, சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் இறையரசு இத்தகையோருக்கே உரியது என்றார் | இயேசுவுக்கு அது பிரியமில்லை. எனவே: குழந்தைகள் என்னிடம் வருவதை அனுமதியுங்கள். அவர்களை தடுத்து நிறுத்தாதீர்கள். தேவனுடைய ராஜ்யம் குழந்தைகளைப்போன்றோருக்கு உரியது என்றார். |

வசன தியானம்-146

# இயேசுவும் சிறுபிள்ளைகளும்

## இயேசுவுடன் நேரத்தை செலவிடுதல்

SPENDING TIME WITH JESUS

Mark-10:14 மாற்கு-10:14

குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களை தடுக்காதீர்கள். சிறு குழந்தைகளைப் போன்றோர் கடவுள்-ராஜ்யத்தை சேர்ந்தவர்கள். மாற்-10:14

நமது குழந்தைகளைக் குறித்து சற்றே சிந்திப்போம். நம் குழந்தைகள் இயேசுவுடன் நேரத்தை செலவிடப்போகிறார்கள் என்றால், அவர்கள் என்ன செய்ய விரும்புவார்கள்? என்பதை சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.




இயேசு குழந்தைகளுடன் நேரத்தை செலவிட விரும்புகிறார். ஒருமுறை, பெற்றோர் தங்கள் குழந்தைகளை இயேசுவிடம் கொண்டுவந்து, இயேசு தங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிக்கவேண்டும் என்று விரும்பினர். ஆனால், சீடர்கள் பெற்றோரைத் தடுத்தனர். இயேசுவுக்கு குழந்தைகள் என்றால் மிகப்-பிரியம் என்பதை அவர்கள் உணரவில்லை. எனவே, இயேசு சீடர்மீது கோபம் கொண்டு, ‘‘குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களை தடுக்காதீர்கள்’’ என்றார் (மாற்-10:14மு). பின்பு இயேசு குழந்தைகளை அழைத்து, அவர்களை அணைத்துக் கொண்டு, முத்தமிட்டு அவர்கள் மீது கைகளை வைத்து ஆசீர்வதித்தார்.

நம் பிள்ளைகள் இயேசுவோடு நேரம் செலவிடுவது குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதை அவர்களிடம் கேட்டு அறிவோம். நம் பிள்ளைகள் இயேசுவிடம் எப்படி செல்ல விரும்புகிறார்கள்? மகிழ்ச்சியுடன் ஓடிச் சென்று அவர் மடியில் அமர விரும்புகிறார்களா? அல்லது தயக்கத்துடனா? இயேசுவோடு செலவிடும் நேரத்தை எவ்வாறு செலவிட நினைக்கிறார்கள் என்பதை கேட்டு அறிவோம். இயேசுவுடன் விளையாடுவார்களா? அவரிடம் பல கேள்விகள் கேட்டு கற்றுக்கொள்வார்களா? அல்லது அவருடன் ஆடி-பாடி மகிழ்வார்களா? இதை நாம் குழந்தைகளிடம் கேட்டு அவர்களை உற்சாகப்படுத்துவோம். இயேசுவின் பிள்ளைகளாக நாமும் நம் நேரத்தை அவருடன் மகிழ்வுடன் செலவிட நம்மை அர்ப்பணிப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.


REV. DHARMARAJA

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழியவு இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதி வு ஊழியங்கள், சென்னை–93. தென்னிந்தியா.

தேவசெய்தி...



சகோ. சாம் இம்மானுவேல்

# தடைகள் தகர்ந்து போகும்

"எக்காள சத்தத்தை ஜனங்கள் கேட்டு, மகாஆரவாரத்தோடே முழங்குகையில், எரிகோவின் அலங்கம் இடிந்து விழுந்தது."

யோசுவா 6:20ந

## Obstacles will go shattered

**Bro. G. Sam Immanuel** M.A., B.D
Catechist - CSI Tinnvely Diocese
Tirunelveli District - 627 010, Tamilnadu, South India

இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள். இரட்சிப்பு பத்திரிக்கை வழியாய் உங்களைச் சந்திப்பதிலே மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஆண்டவருடைய வார்த்தைக்கு நேராக கடந்து செல்வோம்.

Sparta மற்றும் Troy நாடுகளுக்கிடையே போர் நடந்தது. Sparta மன்னன் புதிரான ஒரு தந்திரத்தை பயன்படுத்தி போரில் வென்றான். Sparta ராணுவத்தினர் மரத்தால் செய்த இராட்சத (மிகப்பெரிய) குதிரையை இழுத்துவந்து Troy நாட்டின் கோட்டை முன் நிறுத்திவிட்டு படைவீரர்கள் அனைவரும் காட்டுக்குள் ஒளிந்துகொண்டனர். இதைப் பார்த்த Troy நாட்டு படைவீரர்கள் ராஜாவிடம் இதை அறிவித்தனர். ராஜா வந்து அதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு, 'இந்த இராட்சத-குதிரையை நமது கோட்டைக்குள் இழுத்து சென்று வீதிகளில் வலம் வந்து, வெற்றியின் சின்னமாக அரன்மனை முன் நிறுத்துங்கள்' என்றார். வெற்றி கிடைத்தது என்ற மகிழ்ச்சியில், அன்றிரவு அவர்கள் புசித்துக்குடித்து உறங்கியபோது, பதுங்கியிருந்த Sparta வீரர்கள் வெளியே வந்து நகரத்தை கைப்பற்றினர். அதுபோலவே, இஸ்ரவேலரும் யோசுவாவின் தலைமையில் எரிகோ கோட்டைமுன் வந்தபோது கர்த்தர் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்த யுத்த-முறையை பின்பற்றி வெற்றிபெற்றார்கள் (யோசுவா 6:1-10). வேதம் சொல்லுகிறது: "எக்காள சத்தத்தை ஜனங்கள் கேட்டு, மகா ஆரவாரத்தோடே முழங்குகையில், எரிகோவின் அலங்கம் இடிந்து விழுந்தது." (யோசு-6:20) என்று.

நம் வாழ்வில்கூட, நமது வேலையில் தடை, பிள்ளைகளின் படிப்பில் தடை, குடும்பத்தில் ஆசீர்வாதத் தடை போன்ற பல தடைகள் நமக்கு இருக்கலாம். ஆனால் ஆண்டவர் நமக்குக் கொடுக்கும் வாக்கு: 'தடைகள் தகர்ந்து போகும்' என்பதேயாகும். ஆண்டவர் நம் தடைகளை தகர்த்து, வெற்றியை நமக்குத் தர

சித்தம் கொண்டுள்ளார். தடைகளைத் தகர்க்கும் மூன்று வகையான நடைகளைக் குறித்து வேதவசனங்களின் துணையுடன் தியானிப்போம்.

**1) அமைதி நடை - A Silent Walk (யோசுவா-6:10):** யோசுவா ஜனங்களை நோக்கி: நான் சொல்லும் மட்டும், நீங்கள் ஆர்ப்பரியாமலும் உங்கள் வாயினால் சத்தங்காட்டாமலும் இருங்கள்; உங்கள் வாயிலிருந்து ஒரு பேச்சும் புறப்பட வேண்டாம். (வச-10) என்றார். எரிகோ மதிலை தகர்க்க தேவன் கற்றுக்கொடுத்த முதல் போராயுதம் அமைதியுடன் கூடிய நடையாகும். அமைதி என்பது வல்லமையுள்ள ஆவிக்குரிய ஆயுதம். அது பிசாசினுடைய கிரியையை அழித்து உலகத்தை ஜெயிக்கும் வல்லமையுள்ளது. நம்மை நாமே ஒரு கேள்வியை கேட்போம்: நான் எல்லாவற்றிலும், எல்லா விதத்திலும் அமைதியை கையாளு கிறேனா? ஒருவர் என்னைக் குறித்து குற்றப்படுத்திவிட்டாலோ அல்லது நமது குடும்பத்திற்கு தீங்கு இழைத்துவிட்டாலோ நம்முடைய செயல்பாடு எவ்வாறாக உள்ளது? நாமும் அந்த நபருக்கு பதிலுக்குப் பதில் செய்கிறோம், தீமைக்குத் தீமையை கொடுத்து விடுகிறோம் அல்லவா? ஆண்டவர் சொல்கிறார்: ‘‘பழி வாங்குதல் எனக்குறியது, நானே பதில் செய்வேன்’’ (ரோம-12:19) என்று. மட்டுமல்ல, ‘‘நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங் கள்’’ என்கிறார் (சங்-46:10). ஆக, நமக்கு விரோதமாய் செயல்படுகிறவர்களுக்கு நாம் பதில் செய்தால், தேவனால் கிரியை செய்ய முடியாது.

ஆபிரகாம் லிங்கன் சொன்னார்: ‘நீங்கள் முன்னேற விரும்பினால் யாருடனும் சண்டை போடாதிருங்கள்; அதில் நேரம் வீணாகிறது, நாயிடம் கடி படுவதைவிட வழி விடுவதே மேல்’ என்று. நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. ‘‘இயேசு ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார். மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல் அவர் தமது வாயைத் திறவாதிருந்தார் (அப்-8:32). எனவே, நாமும் நம்மைபற்றி தீமை-பேசுகின்றவர்கள், குறை-சொல்லுகிறவர்கள், நம்மை அழிக்க நினைக்கிறவர்கள் முன்பாக அமைதி-நடை நடக்கும் போது, நம் வாழ்வின் தடைகளும் தகர்ந்துபோகும்.

**2) விசுவாசநடை - A Faith Walk (யோசுவா-6:3,4):** நீங்கள் அனைவரும் பட்டணத்தைச் ஒருதரம் சுற்றிவாருங்கள்; இப்படி ஆறுநாள் செய்யக்கடவீர்கள். ஏழாம்நாளில் பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவரக்கடவீர்கள (வச-3,4). இரண்டாவ தாக எரிகோவை தகர்த்துபோட தேவன் கற்றுக்கொடுத்த போர் ஆயுதம் விசுவாச நடையாகும். அதன்படி, இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு முழுமையாக கீழ்ப்படிந்து, அவருடைய வார்த்தையை விசுவாசத்தோடு கடைபிடித்து விசுவாச நடை நடந்து எரிகோவை தகர்க்கிறதை இங்கு நாம் காண்கிறோம். கர்த்தருக்கு முழுமையாக கீழ்ப்படிய மக்களை வழிநடத்தும் ஒரு செயல்முறையே இந்த ‘விசுவாச நடை.’ பவுலடிகள் சொல்கிறார்: ‘‘நாங்கள் மாம்சத்தின்படி நடக்கிறவர் களாயிருந்தும் மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல’’ (2கொரி-10:3) என்று. ஆம், நம்முடைய போர் மாம்சத்தில் இல்லாமல் விசுவாசத்தின் மூலமாக

இருந்தால் நிச்சயமாக நாம் எரிகோ போன்ற தடையை மேற்கொள்ள முடியும். ஆண்டவர் நம்மிடம் பெரிய விசுவாசத்தை எதிர்பார்க்கவில்லை. ‘கடுகு விதையளவு‘ விசுவாசத்தையே எதிர்பார்க்கிறார் (மத்-17:20ம). இன்றைக்கு நாம் சற்றே சிந்தித்து பார்ப்போம். எனக்கு கடுகுவிதைளவு (சிறிதளவு) விசுவாசமாவது இருக்கிறதா? என்று. மத்தேயு 15:22-28ல் கானானிய ஸ்திரியின் விசுவாசத்தை இயேசு பாராட்டுகிறார். தன் மகளை பிசாசின் பிடியிலிருந்து மீட்பதற்கு இயேசுவின் மேல் அவர் வைத்த விசவாசம் இங்கு விவரிக்கப்படுகிறது. மூன்று முறை அவளது விண்ணப்பத்துக்கு பதில் கிடைக்காத பின்னரும் அவள் இயேசுவிடம் வாதாடி தன் மகளை மீட்ட அந்த விசுவாசத்தை மெச்சும்வண்ணம் இயேசு சொல்கிறார்: ‘‘மகளே உன் விசுவாசம் பெரிது’’ (வச-28) என்று. நாமும்கூட, ‘விசுவாச-நடை’ நடப்போம், சிறிதான நம் விசுவாசத்தைக் கொண்டு பெரிய காரியங்களை செய்வோம்.


**3) தோத்திர நடை - A Praise Walk (யோசுவா-6:20):** ‘‘எக்காள சத்தத்தை ஜனங்கள் கேட்டு, மகா ஆரவாரத்தோடே முழங்குகையில், எரிகோவின் அலங்கம் இடிந்து விழுந்தது.’’ ஆவிக்குரிய போராயுதத்தில் வலிமைவாய்ந்த ஆயுதம் துதி-ஸ்தோத்திரம். ‘‘இஸ்ரவேல் மகாசத்தமிட்டு ஆர்ப்பரித்தபோது எரிகோ கோட்டை விழுந்தது.’’ நம் வாழ்வில் இதை நாம் தழைகீழாக செய்கிறோம்; நமது பிரச்சனைகள் மாறியபின் துதிக்கிறோம். ஆசீர்வாதம் கிடைத்தபின் தேவனுக்கு நன்றி சொல்லுகிறோம். ஆனால், ஆண்டவர் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது: நம் பிரச்சனைகள், கவலைகள், போராட்டங்கள் நடுவே அவரைத் துதிப்பது. பிலிப்பு பட்டணத்தில் பவுலும் சீலாவும் கைது செய்யப்பட்டு, அடித்து துன்புறுத்தப்பட்டு, தொழுமரத்தில் மாட்டப்பட்டிருந்த நிலையில் நள்ளிரவில் தேவனை துதித்து பாடினார்கள்; அவர்கள் கட்டு தெறிபட்டது (அப்-10:25,26). 2நாளா 20: 21,22யில் யோசபாத் ராஜாவுக்கு விரோதமாய் 3அரசர்கள் போர் செய்ய வருகிறார்கள் அதன் நடுவில் யோசபாத் ராஜா பாடகர் குழுவை படைவீரர்களுக்கு முன் நிறுத்தி தேவனை துதித்து பாடச்செய்கிறார். நடந்தது என்ன? எதிரிகள் தங்களுக்குள் சண்டையிட்டு மாண்டனர். இதை போல் நம்மால் செய்யமுடியுமா? ஆண்டவரே என் தோல்விக்காக உமக்கு ஸ்தோத்திரம் என்று சொல்ல முடியுமா? இன்று ஆண்டவர் நம்மிடம் அதைத்தான் எதிர்பார்க்கிறார் நம்முடைய வாழ்வில் தடைகள் தகர்ந்து போகும்படிக்கு வேதனையின் நடுவே கடவுளைத் துதித்து, ‘தோத்திர-நடை’ நடப்போம்.

மூன்று காரியங்கள் இங்கு நாம் கற்றுக்கொண்டோம். தடைகளைத் தகர்ப்பதற்கு அமைதியாய் நடப்போம், விசுவாசத்தோடு நடப்போம், தோத்திரத்தோடு நடப்போம். தேவன்தாமே நம்முடைய தடைகளை மாற்றிப்போட்டு நம்மை ஆசீர்வதிப்பராக ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
**சகோ. ஜி. சாம் இம்மானுவேல்**

சகோ. ஜி. சாம் இம்மானுவேல், சபை-ஊழியர், சி.எஸ்.ஐ. திருநெல்வேலி
திருமண்டலம், திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு, தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 78



# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev.Dr. D. Suresh Rajan

Rev. Dr. சுரேஷ் ராஜன்

## சங்கீதம் - 78

EPISODE-78

**முன்னுரை:-** இச்சங்கீதம், நமது முற்பிதாக்களின் வாழ்வில் நடந்த சம்பவங்களை ஒன்று திரட்டி இன்றைய சமுதாயமும், வருங்கால சமுதாயமும் இறைவனின் மாட்சியை அறிந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இது, கடந்த காலங்களில் பாவம் செய்த இறைமக்கள், எவ்வாறு கடவுள் தரும் பாவமன்னிப்பையும் விடுதலையையும் பெற்று இறையாசியைப் பெற்றனர் என்பதையும், இஸ்ரவேலர் தேவனுடைய உடன்படிக்கையை பலமுறை மீறினாலும் தேவன் எவ்வாறு தம் வாக்குக்கு உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்பதையும் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. இஸ்ரவேல் தேசத்தில் போர் நடந்தகொண்டிருக்கும் இந்நாட்களில், இச்சங்கீதத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய மூன்று முக்கியமான பாடங்களை இங்கு காண்போம்.

**1. முதல் பாடம் - (வச:-9-22):-** எப்பிராயீமின் புத்திரர் ஆயுதமணிந்தவர்களாக இருந்தனர். அவர்கள் கரங்களில் வில் இருந்தது, ஆனாலும் அவர்கள் போரிடாமல், புறமுதுகு காட்டி ஓடினார்கள். அவர்கள் தேவனுடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளவில்லை. தேவனுடைய கட்டளைகளின்படி நடக்க அவர்கள் சம்மதிக்கவும் இல்லை. கடவுளின் வல்ல செயல்களையும், அவர் அவர்களுக்குக் காண்பித்த அதிசயமான காரியங்களையும் மறந்துபோனார்கள். கடலைப் பிளந்து தண்ணீரை குவியல்களாக நிற்கும்படி செய்ததை, அதன் வழியாய் அவர்களை கடந்துசெல்லப் பண்ணினதை, பகலில் மேகத்தின் நிழலிலும், இரவில் அக்கினியின் வெளிச்சத்திலும் வழிநடத்தியதை மறந்துபோனார்கள். வனாந்தரத்தில் கன்மலையைப் பிளந்து, தண்ணீரை நதிபோல் ஓடிவரச்செய்தவரை கோபமூட்டி பரீட்சை பாத்த்தார்கள். அவருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். இறைவனுடைய வல்லமையை மட்டுப்படுத்தினார்கள். அவர்கள் தேவனை விசுவாசியாமலும், அவருடைய இரட்சிப்பை நம்பாமலும் போனபடியால், யாக்கோபுவுக்கு விரோதமாக அக்கினி பற்றியெரிந்தது, இஸ்ரவேலுக்கு விரோதமாய் கோபம் மூண்டது (வசனம்-21,22). இதிலிருந்து நாம் கற்றக்கொள்ளும் பாடம்: தேவன் இஸ்ரவேலை அவர்களது அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தது போல நம்மையும் விடுவிக்க வல்லவர் என்பதே. எனவே நாம் முற்றிலுமாய் கடவுளை சார்ந்துகொண்டு, பிசாசுக்கு விரோமாக நாம் நடத்தும் ஆவிக்குறிய போரில் புறமுதுகு காட்டாமல் முன்னேற வேண்டும்.

**2. இரண்டாம் பாடம்:- (வச: 23-53)**

கர்த்தராகிய ஆண்டவர் தம் மக்களின் தேவைகளை அற்புதமான முறையில் சந்திப்பதை இப்பகுதியில் காண்கிறோம். 'சாப்பிடுவதற்கு மன்னாவை அருளினார்' 'தூதர்களின் அப்பத்தை மனிதன் சாப்பிட்டான்; அவர்களுக்கு ஆகாரத்தை பூரணமாய் அனுப்பினார்.' (வச-25). 'அவர்கள் விரும்பிய இறைச்சியை அவர் களுக்குக் கட்டளையிட்டார்' 'மாமிசத்தை தூளத்தனையாயும், சிறகுள்ள பறவை களை கடற்களை மணலத்தனையாயும் வருஷிக்கப்பண்ணினார்' (வச-27). ஆனாலும் நமது முற்பிதாக்கள் 'இச்சையை வெறுக்கவில்லை' (வச-30). அதன் விளைவாக தேவகோபம் அவர்கள் மீது வந்தது. ''இவைகளெல்லாம் நடந்தும் அவர் செய்த அதிசயங்களை அவர்கள் நம்பாமல், பின்னும் பாவம்செய்து வந்தார்கள்'' (வச-32). அவர்களுடைய இருதயம் நிலைவரப்படாததால் திரும்பத் திரும்ப பாவம் செய்தார்கள். ஆனாலும் ஆண்டவர் அவர்களுடைய அக்கிரமங் களை மன்னித்தார். அவர்களோ, அவரை விசனப்படுத்தினார்கள். ஆயினும், அவர்களை பத்திரமாய் வழிநடத்தினார் (வச-53).

இதன் வழியாய் நாம் கற்றுக்கொள்ளும் பாடம்: தேவன், நமது தேவைகளை அற்புதமாய் சந்திக்க வல்லவர். நாம் அவரை மாத்திரமே சார்ந்துகொண்டு, அவர் அருளும் ஞான-நன்மைகளினால் திருப்தியுடனிருக்கவேண்டும். நம் மனமும் மாம்சமும் விரும்பியதையே இச்சித்து, கர்த்தரை கனவீனப்படுத்தும்போது, அதன் விளைவுகளை நிச்சயம் சந்திக்கவேண்டும். ஆனால், ஆண்டவரோ, மிகுந்த கிருபையுள்ளவராக நமக்கு இரங்கி நம்மை விடுவிப்பதற்கான அனைத்தையும் செய்கிறார். சிலுவையின் தியாகத்தை, இரட்சண்ய அழைப்பை உதாசீனப்படுத்தி, நிர்விசாரமாய் வாழ்ந்துகொண்டிருக்கிறோமா? என நம்மை நாமே சுயபரிசோதனை செய்து பார்ப்போம்.

**3. மூன்றாம் பாடம்:- (வச: 54-72)**

ஆண்டவர் இஸ்ரவேல் மக்களை, வாக்களித்த தேசத்துக்குக் கொண்டுவந்து, அங்கிருந்த மக்கள் கூட்டங்களைத் துரத்திவிட்டு அங்கு அவர்களை குடியேற்றி னார். ஆனால், அவர்களோ, தேவனை பரீட்சைபார்த்து, அவருக்கு கோபமூட்டி னார்கள். இறைவனுடைய சாட்சிகளை கைக்கொள்ளாமற்போனார்கள். விக்கிரக வழிபாட்டுக்கு தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். தேவன் அதைக்கண்டு உக்கிர மாகி, இஸ்ரவேலை மிகவும் வெறுத்து (வச-59) தமது பிரசன்னத்தை அவர்களிட மிருந்து விலக்கிக்கொண்டார். இதினிமித்தம் பலர் அழிந்துபோயினர். ஆனாலும், தமது தயவினிமித்தம் யூதா கோத்திரத்தை தெரிந்துகொடு, தம் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும்படி தாவீதை தெரிந்துகொண்டார்.

இதன் வழியாய் நாம் கற்றுக்கொள்ளும் பாடம்: ஆண்டவருடைய பிள்ளைகள் அவரது சாட்சியைக் காத்து நடக்கவேண்டும். விக்கிரகாராதனையை வெறுத்து (பொருளாசை) இறைவனை கனப்படுத்தவேண்டும். எத்தனைமுறை நாம் தவறிப் போயிருந்தாலும் ஆண்டவர் திரும்பவும் நம்மைத் தேடிவந்து தமது அன்பை நம்மீது பொழிகிறார். இன்று தமது திருமைந்தனாம் இயேசு கிறிஸ்துவை நமக்கு மேய்ப்பராக அருளியிருக்கிறார். எனவே, இயேசு கிறிஸ்து அருளும் பாவமன்னிப் பையும் மீட்பையும் பெற்றவர்களாக வெற்றி வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம்.

**முடிவுரை:-** அன்பானவர்களே! பழைய ஏற்பாட்டு மக்களின் வாழ்வு நமக்கு பெரிய எச்சரிப்பையும், கடவுளின் அன்பு நமக்கு பெரிய நம்பிக்கையையும் அளிப்பதாக உள்ளது. நமது முன்னோர்களைப்போல் நாம் நமது இருதயத்தைக் கடினப்படுத்தாமல், ஆண்டவரின் ஆளுகைக்கு முற்றிலுமாய் நம்மை ஒப்புக் கொடுத்து, வெற்றியுள்ள உலக வாழ்வு வாழ்ந்து பரம கானானில் பங்கடைய ஆண்டவர்தாமே நமக்கு உதவிசெய்வாராக. ஆமென்.

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# PRAYER-WINDOW PRAYER-WINDOW

## ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

### ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் நவம்பர் - 2023

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 10-11-2023 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 17-11-2023 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 24-11-2023 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி **''தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க''** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**
**MOBILE:** 9962924900/7871676100
**WHATSAPP:** 9789914463/7871676100
**E-MAIL:**sjddharmaraja@gmail.com
**POSTAL ADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93
**WEBSITE:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY:**
NAME: DHARMARAJA SJD.
S.B. ACCOUNT NO: 601071548.
BANK AND BR.: INDIAN BANK, NESAPAKKAM
IFSC CODE: IDIB000N122.
BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.
GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:
REV. DHARMARAJA SJD: 9789914463

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: **9789914463**

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93. E-mail: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463

# வேதாகம போட்டி–156 சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
9) அன்னாள் ஜெபக்கனி CBE
10) அனி பாய் ஜாண் TIN
11) அனிதா CBE
12) அனிதா மோகன்ராஜ் ERO
13) அரோமா சாத்ராக் TIN
14) ஆர்தர் மாசில்லாமணி CHE
15) அருள்செல்வி VIR
16) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
17) பாமா மாதவன் KAL-AP
18) பெல்சி தங்கராஜ் CHE
19) பெனிட்டா பிராங்க்ளின் CHE
20) பெற்.ஃ.டி பிரின்ஸ் CHE
21) பியூலா அலெக்ஸ் CHE
22) பியூலா ஜேசுராஜன் PON
23) செலினா பென்சி வில்சன் DR, KUW
24) சந்திராபாய் மாசிலாமணி AVD
25) சந்திரலேகா KAL-AP
26) சந்திரா மேரி விஜயன் BAN
27) சந்திரா சாமுவேல் TIN
28) சார்லஸ் ஃ.பின்னி DR CHE
29) சார்லஸ் சாலோமோன் WG-CMR SHI
30) சார்லட் டேவிட் CHE
31) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
32) கிறிஸ்துதாஸ் GOP
33) கிறிஸ்டி ஞானராஜ் CHE
34) கிறிஸ்டி மெர்சி TUT
35) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
36) சின்தி யோசுவா TJR
37) டெய்ஸி ஜெபதாஸ் TCY
38) டெய்ஸி சாம் TUT
39) டேனியல் தாமஸ் TIN
40) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
41) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
42) தெபோராள் ஆனந்தமணி TUT
43) டெல்வின் இம்மானுவேல் CBE
44) தேவநேசம் ராஜாசிங் CHE
45) டோராபாய் CHE
46) எலிசபெத் செல்லத்துரை CHE
47) எமிமாள் மில்டன் CHE
48) எமிமாள் (ஜெஸிக்கா) சாமுவேல் MDU
49) எஸ்தர் D.R. TIN
50) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
51) குளோரி ரவீந்திரன் TIN
52) ஞானம் ஜெபராஜ் TIN
53) ஞானம் பிலிப் CHE
54) ஞானராணி G. TVL
55) ஞானசெல்வி மோசஸ் USA
56) ஞானசுந்தரி நாகராஜன் TIN
57) கோல்டா ஜேசுபாதம் MUM
58) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
59) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
60) கிரேஸ்லின் சாந்தி TIN
61) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
62) கிரேனா அன்புரோஸ் CHE
63) கிரேஸியா ஜெயபால் CHE
64) கிரிசெல்டா செய்லர் CHE
65) ஹெலன் ஜான்சிராணி TIN
66) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
67) ஹெலன் திலக் TUT
68) ஹேமா அஜீத் CHE
69) ஹேமா கேப்ரியேல் BAN
70) ஹெப்சி அசரியா PON
71) ஹெப்சிபா மங்களராஜ் TIN
72) ஹிம்லா ராஜகுமாரி CHE
73) இளவரசி ஜோபிதா CBE
74) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
75) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
76) ஜமீலா செல்வராஜ் CHE
77) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
78) ஜேன் தர்மராஜ் TIN
79) ஜான்ஸி ராணி CHE
80) ஜான்ஸி சந்தியா MKM
81) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
82) ஜெபா கோல்டா KAN
83) ஜெபா ஜெயராஜ் CHE
84) ஜெபக்குட்டி மோசஸ் TIN

85) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT
86) ஜெபசீலி கிளின்டன் CHE
87) ஜெபா சீனி MAR TIN
88) ஜெபஸ்டின் G. TIN
89) ஜெமீலா நிக்ஸன் CHE
90) ஜெனிலா CHE
91) ஜென்ஸி ஞானேஷ் MUM
92) ஜெனித்தா செல்வின் TIN
93) ஜெனிட்டா ஹெலன் CBE
94) ஜெனிட்டா ஷெருபா ஞானவேல் DHA
95) ஜெரின் ஸ்டீபன் MUM
96) ஜெஸி செல்லதுரை CBE
97) ஜெஸி ஜெயக்குமார் TIN
98) ஜெயா ஆல்பர்ட் KUM
99) ஜோனா ஸ்டீபன் AVD
100) ஜோஸ்.ஃபின் ஜெஸி CHE
101) ஜாய்ஸ் பாண்டியன் CHE
102) ஜுலியட் ஜெபா CHE
103) ஜுலியட் ஜெயக்குமார் TIN
104) கலா கிருபாகரன் TIN
105) கலையரசி செல்வராஜ் CHE
106) கஸ்தூரி எலியாஸ் TIN
107) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
108) லதா மைக்கேல்ராஜ் CHE
109) லீலா டேவிட் CHE
110) லீலா ஜோஸப் CBE
111) லில்லி ஜாண்ஸன் CHE
112) லிஸி டென்சிங் TIN
113) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) JAY
114) மல்லிகா V. CHE
115) மணிமேகலை ஜெயக்குமார் TIN
116) மனோகரம் தனராஜ் NAZ
117) மரிய பாப்பா CHE
118) மரியாள் ஜே.எஸ். TUT
119) மேபல் கிறிஸ்டியான் CHE
120) மெஜிலா ஜோஷ்வா TUT
121) மெர்சிபா CBE
122) மெர்சி .ஃபுளோரா பாஸ்கர் VEL
123) மெரிட்டா ஜெயபாலன் TCY
124) மியூரியல் புஷ்பராஜ் CHE
125) நகோமி நிர்மலா CHE
126) நதியா லாரன்ஸ் TVR
127) நிக்ஸன் எவர்பிரைட் TIN
128) ஆலிவ் ஜெயபாலன் CBE
129) பாக்யபாய் ஆரோன் TIN
130) பமீலா எட்வின் NAG
131) பெர்சி பால் பொன்சிங் TUT
132) பிங்க்லின் தேவமலர் சந்தோஷ் CHE
133) பொன்மணி உத்தமசிங் NAZ
134) பிரேமா பூபாலன் AVD
135) பிரேமா ஜானி PCM
136) பிரேமா ஸ்டாலின் CHE
137) பிரின்ஸ் தயாநிதி CHE
138) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
139) பிரிசில்லா தாஸ் CHE
140) பிரிஸ்கில்லாள் சசி CBE
141) பிரியா ராஜ்குமார் CHE
142) ரேச்சல் கனகராஜ் CBE
143) ராஜகுமாரி சன்னியாசிமுத்து TUT
144) ராஜபிரமீளா TPT
145) ராஜ்மேரி சார்லஸ் KER
146) ரமோலா அதிசயராஜ் TIN
147) ராணி .ஃபுளோரா APM-TEN
148) ராணி பிரபாகர் TIN
149) ராணி சாமுவேல்ராஜ் CHE
150) ரத்னா டென்னிஸன் CBE
151) ரத்னாவதி பாண்டியன் CHE
152) ரெஜினா விக்டர் TIN
153) ரோஸ்லின் மார்கிரெட் CHE
154) ரோஸி ஸ்டீபன் CHE
155) ரூபவதி நோபிள் TIN
156) ரூத் TCY
157) ரூத் ஜாண்ஸன் TIN
158) சலோமி மனோகர் DR. CHE
159) சம்பு ஜெயச்சந்திரன் MDU
160) சாமுவேல் டேவிட் TPT
161) சாரா பாலசிங் MDU
162) சரோஜா CHE
163) சரோஜினி எலிசபெத் CHE
164) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
165) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
166) செல்வராஜ் K. CBE

பட்டியல் தொடர்ச்சி பக்கம் 19ல்...

## ஜெப-ஜன்னல் ஜப-குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - Come! Let us all intercede to God**

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஹாமாஸ் போர், உக்ரைன்-ரஷ்யா போர் மற்றும் சூடான்-உள்நாட்டுப் போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், வன்முறைவாதம், பிரிவினைவாதம் போன்றவை வேரறுக்கப்பட... பழங்குடி மற்றும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... பொருளாதாரம்-விலைவாசி சீரடைய... இந்தியாவில் நடைபெறவிருக்கும் 5மாநில சட்டசபை தேர்தல்கள் நேர்மையான முறையில் நடைபெற... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நயல்வாழ்வுக்காக... மக்கள் இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... மத-வாத சக்திகள், வன்முறைவாத சக்திகள், மக்களை பிரித்தாளும் சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், DR. கிறிஸ்டினா, கி.ஃ.ப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோ.ஃ.ப்னா ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

6) திரு. ஆபிரகாம் மனோகர், திரு. டெம்பிள் வில்லியம், திரு. செல்வராஜ், திருமதி. சாந்தி அலெக்ஸ், திருமதி. தங்கசெல்வன், திருமதி. அன்னாள் ஜெபக்கனி, திருமதி. பங்கஜம் வில்சன், திரு. வெஸ்லி சாமுவேல், திரு. நெல்சன் (நகோமி), திருமதி. சுந்தரிபாய், திரு. அப்பன் டேவிட், திருமதி. ஃ.பிளாரன்ஸ் ராஜமணி, திரு. பிலிப், திருமதி. ஞானரத்தினபாய் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. செல்வி பாண்டியன், திருமதி. ஜெயா சாமுவேல், திரு. ரிச்சர்டு, திருமதி. ராஜேஷ்வரி, DR.ஷீபா, திருமதி. ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. விமலா டேவிட், திருமதி. மேரி கிரேஸ், திருமதி. மகிமா சந்திரன், திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. வசந்தா அன்பன், திரு. டி. மனோகர், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திரு. ஜாண் இன்பராஜ், திரு.ஜே.ஆர். டேவிட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன் திருமதி. வனஜா ஹெர்பர்ட், ஆகியோரது குடும்பங்களுக்காக...

9) திருமதி. சேர்டியஸ் தாவீது அவர்கள் சுக-பிரசவத்தில் அருமையான குழந்தை பெற்றெடுக்க...

# வேதாகம போட்டி-157

வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்கவேண்டும். கடைசி நாள்: 25-11-2023

**வேத–பகுதி: மாற்கு சுவிசேஷம் முழுவதும்**

1. பலி, உப்பினால் உப்பிடப்படுவதுபோல் மனுஷன் எதினால் உப்பிடப்படுவான்?

2. ‘நடக்கிற மனுஷரை மரங்களைப்போலக் காண்கிறேன்’ - யார்? யாரிடம் சொன்னது?

3. இயேசு அதிகாலையில் இருட்டோடே எழுந்து எங்கு போய் ஜெபம் பண்ணினார்?

4. அவளிடத்திலிருந்து இயேசு ஏழு பிசாசுகளை துரத்தியிருந்தார் - ‘அவள்’ யார்?

5. உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிறவர்கள் யார்?

6. ‘தலீத்தாகூமி’ என்று இயேசு சொன்னதன் அர்த்தம் என்ன?

7. இயேசுவினுடைய சிலுவையை சுமக்கும்படி யாரை பலவந்தம் பண்ணினார்கள்?

8. இயேசுவை தனியே அழைத்துக்கொண்டுபோய் கடிந்துகொள்ள தொடங்கியது யார்?

9. ‘தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே’ - **சரியா, தவறா**?

10. ‘நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்’ -**சரியா தவறா**?

11. ‘இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டார்’ -**சரியா தவறா**?

12. ‘தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதில் விழுந்துபோவான்’ -**சரியா தவறா**?

13. ‘**இவர்**’ ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்:
அ) தேவகுமாரன் ஆ) மனுஷகுமாரன் இ) ஆவியானவர் ஈ) தாவீதின் குமாரன்

14. சில விதை ‘**இங்கே**’ விழுந்தது; ஆகாயத்து பறவைகள் அதை பட்சித்துப்போட்டது:
அ) பாறை-மீது ஆ) வழியருகே இ) தண்ணீரில் ஈ) தரிசு-நிலத்தில்

15. ஒருவனும் ‘**இதை**’ பழைய வஸ்திரத்தோடு இணைக்கமாட்டான்:
அ) துப்பட்டியை ஆ) மேலங்கியை இ) கோடித்துண்டை ஈ) உள்ளாடையை

16. நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் ‘**இதை**’ அவமாக்குகிறீர்கள்:
அ) தேவ-வசனத்தை ஆ) கட்டளையை இ) சுவிசேஷத்தை ஈ) உபவாசத்தை

17. ஆலயத்தில் அப்பம் புசித்தார் அவர், ஆசாரியன் அல்ல!! அனைவருக்கும் அப்பம் பிட்டார் அவர், திருவிருந்தில் அல்ல!! ஆபத்தில் பசி-தணித்தார் அவர், ஆண்டவர் அல்ல!! **யார் அவர்?**

18. பேய் விரட்டுவர் இவர்கள், மந்திரவாதி அல்ல! பல-பாஷை பேசுவர் இவர்கள், துபாஷி அல்ல! பாம்பு பிடிப்பர் இவர்கள், பாம்பாட்டி அல்ல! நோய் நீக்குவர் இவர்கள், டாக்டர் அல்ல! அனைத்தும் செய்வர் இவர்கள், கடவுள் அல்ல! **யார் இவர்கள்?**

19. அங்கி இது அங்கி! அரமனைக்குள் அணிவிக்கப்பட்ட அங்கி! அவமானத்தின் அடையாளமான அங்கி! அரமனைக்குள் அவிழ்க்கப்பட்ட அங்கி! **இது என்ன அங்கி?**

20. விலை உயர்ந்தது இது, வெள்ளை பாட்டில்-உள் இருந்தது! வீசும்-வாசனை கொண்டது இது, விருந்து வீட்டில் வந்தது! உத்தமமானது இது, ஊற்றிவிடப்பட்டது! **இது என்ன?**

பதிலளிக்க கடைசி நாள்: 25-11-2023 படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்



SIS.C. ANGEL

இது சேனைகளின் கர்த்தராலே உண்டாகிறது; ஆலோசனையில் அவர் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர். ஏசா–28:29

This also cometh forth from the Lord of hosts, which is wonderful in counsel, and excellent in work. Isa 28:29

THE WONDERFUL IN COUNSEL HA HIPILI AYESAH

## ஆலோசனையில் ஆச்சரியமானவர்

EPISODE - 54 ஹா ஹிப்லி ஏயிட்ஸா பாகம் - 54

வானத்தையும் பூமியையும் நிரப்புகிற தூரத்துக்கும் சமீபத்துக்கும் தேவனானவரின் நாமத்தில் இரட்சிப்பு விசுவாசிகளுக்கு 'பரிசுத்த புயத்தின்' நவம்பர் வாழ்த்துக்கள்.

**ஏசா-11:2** ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியானவரே! உமது ஆலோசனைகள் மாத்திரம் என் வாழ்வில் பரிபூரணப்படுவதாக. ஆமென்.

**நீதி-20:18** தேவனுடைய ஆலோசனையில் எங்கள் எண்ணங்கள் ஸ்திரப்படுவதாக. நல்யோசனை செய்து யுத்தம் பண்ணுகிற உமது வல்லமையின் வரங்களினால் எங்களை அபிஷேகிப்பீராக.

**சங்-32:8** நான் உனக்கு போதித்து, நடக்கவேண்டிய வழியை உனக்கு காட்டு வேன். உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.

**சங்-86:11** உம் வழியை எனக்கு போதியும்; நான் உமது சத்தியத்தில் நடப்பேன். நான் உமது நாமத்துக்கு பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்.

**1சாமு-30:1-20** தாவீது தன் ஆலோசனையில் நடந்து, எல்லாவற்றையும் இழந்து நிற்கிறார். மிகவும் நெருக்கப்பட்டு, பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுகிறார். பின்னர், ஆவியானவரின் ஆலோசனையினால் தன்னை திடப்படுத்திக் கொண்டு, 'நான் அந்தத் தண்டை பின்தொடர வேண்டுமா? அதைப் பிடிப்பேனா?' என்று கேட்கிறார். ஆம், அவர் தன் முழு இருதயத்தோடு கேட்டபோது. ''திருப்பிக் கொள்வாய்'' என தேவனிடமிருந்து பதில் வருகிறது. பரிசுத்த ஆவியானவருக்குள் (பேசோர் ஆற்று அண்டையில்) அர்ப்பணிக்க எதிரிகள் வீழ்த்தப்பட்டார்கள். இழந்த நன்மைகள் ஒன்றும் குறைவுபடாமல் திருப்பிக் கொள்கிற வழி உண்டாகிறது (அன்று தாவீதின் கொள்ளை), இன்று நம் கொள்ளை என்பார்கள். அல்லேலூயா.

**ஜெபம்:** சத்துவத்தையும் பெலனையும் அருளுகிற இஸ்ரவேலின் தேவனே! பொல்லாப்பை, பொல்லாத வழிகளை (எரே-23:22) விட்டு உம்மிடம் திரும்பும்படி உமது ஆலோசனையில் நிலைத்திருந்து உமது வார்த்தைகளை மட்டும் எங்களுக்குத் தெரிவிக்கிற யௌவன ஜனத்தை ஆசீர்வதிப்பீராக. எங்களை வர்த்திக்கப்பண்ணி ஸ்தோத்திரமும் ஆடல் பாடலின் சத்தமும் எஙகளிடமிருந்து புறப்படப்பண்ணுவீராக. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், பிதாவே. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தொகுப்பு: சகோ. C. ஏஞ்சல் B.Sc திருநெல்வேலி, தென்னிந்தியா

தேன்-துளி வேத வசனக் கதை-150•

# குறைகளை உணர்ந்து செயல்படவேண்டும்


சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A., M.ED.

விறகு-வெட்டி ஒருவன் எப்பொழுதும் முணுமுணுத்துக் கொண்டே இருந்தான். ‘‘ஆதாம் தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படியாததால் அவனுக்கு கிடைத்த தண்டனையின் விளைவால் ‘நான்’ நெற்றி வேர்வை நிலத்தில் விழ பாடுபடுகிறேன்’’ என தினமும் புலம்பிவந்தான். தனக்கு படிப்பறிவில்லாததால் விறகு வெட்டும் தொழில் செய்ய நேர்ந்தது என்பதை உணராமல் ‘ஆதாமை’ குறை சொல்லிவந்தான். இதை தினமும் கவனித்த ஜஸ்டின் என்ற தொழிலதிபர்: ‘இவனுக்கு ஒரு ‘நல்ல’ பாடம் கற்பிக்க வேண்டும்’ என எண்ணினார். ஒரு நாள் அவனை தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்று, ‘இனி நீ விறகு வெட்ட வேண்டாம். தினமும் என் வீட்டில் உணவு உண்டு இரவில் உன் வீட்டுக்குச் செல்லலாம்’ என்று கூறி அவனுக்கு காலை, மதியம் மற்றும் இரவு உணவு கொடுத்து வந்தார்.

நாட்கள் கடந்தன, ஜஸ்டின் விறகுவெட்டியை பரிசோதிக்க விரும்பினார். ஓருநாள், ‘‘வேலையினிமித்தம் வெளியே செல்கிறேன். நான் வரும்வரை என் வீட்டிலுள்ள பொருட்களை பத்திரமாக பார்த்துக்கொள். டைனிங்-டேபிள் மீது தொப்பியை கவிழ்த்து வைத்திருக்கிறேன். அதை மட்டும் தொடாதே’’ எனச் சொல்லி, தொப்பிக்கு அடியில் புறாக்குஞ்சு ஒன்றை வைத்து விட்டு சென்றார். விறகு-வெட்டியின் மனதில் போராட்டம் வெடித்தது. அப்படி இந்த தொப்பிக்குள் என்னதான் இருக்கிறது பார்த்துவிடுவோம் என்று, தொப்பியை எடுத்தபோது உள்ளே இருந்த புறாக்குஞ்சு பறந்து சென்றுவிட்டது. புறாக் குஞ்சை பிடிக்க அவனால் முடியவில்லை. தன் வேலையை முடித்து மாலையில் வீட்டிற்கு திரும்பிய ஜஸ்டின், தொப்பியை திறந்து பார்த்தபோது புறாக் குஞ்சு இல்லை. ஜஸ்டின் விறகு வெட்டியைப் பார்த்து, ‘‘ஆதாமை குறைகூறிய நீ ஆதாமைப்போலவே தோற்றுப்போனாய். எனவே, ஆதாமைத் திட்டாதே. நீ உன் விறகு வெட்டும் தொழிலையே செய்து சாப்பிடு’’ என்று கூறி அவனை அனுப்பிவிட்டார்.

தன் தவறை உணர்ந்த விறகுவெட்டி, அதை இயேசு இரட்சகரிடம் அறிக்கையிட்டு, கடினமாக உழைத்து முதலில் சிறிய விறகு கடை, பின்னர் பெரிய மரக்கடை என வாழ்வில் உயர்ந்து, அநேகரை இயேசுவண்டை நடத்தும் கருவியாக மாறினான்.

பிரியமானவர்களே! நாமும்கூட இயேசுவின் போதனைகளின்படி நடவாததால் அநேக துன்பம், துயரம், பிரச்சனைகள், இழப்புகள் ஏற்படுகின்றன. இந்த விறகு வெட்டியைப்போல் நாமும் நம் பிழைகளை உணராமல் நம் இரட்சகரையும் மற்றவர்களையும் குறை கூறுகிறோம். பிறரை குறைகூறுவதை விட்டுவிட்டு இயேசுவை பற்றிக்கொண்டு மேலான ஆசீர்வாதங்களை பெற அனைவரையும் வாழ்த்துகிறேன்.



சகோ. அசரியா

வேதம் இவ்வாறு கூறுகிறது:

உங்கள் பாவங்களே கர்த்தர் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. ஏசாயா 59:2

உங்கள் பாவங்கள் உங்களுக்கு நன்மையை வரவிடாதிருக்கிறது. எரே 5:20

பாவம் செய்யாமல் நீதிக்கேற்க தெளிந்தவர்களாயிருங்கள். 1கொரி 15:34

பாவம் செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான். 1யோவா 3:4

---

Bro. M. Azariah Gnanadoss M.A., M.Ed.
Editor, ‘Ratchippu’ Tamil Christian Monthly Magazine, Chennai-93. Mobile: 9962924900

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

EPISODE 16

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
# இரண்டாம் வருகைக்குத் தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்




இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-4 பகுதி-1

### 4. கிறிஸ்தவப் பணியின் ஆரம்பம்

### 1. போர்த்துகீசு ஆதரவு கிறிஸ்தவ முன்னோடிகள்

ஸ்பெயின் மன்னர்கள் மற்றும் போர்ச்சுகல் நிறுவனங்கள் தங்கள் ஆக்கிரமிப்புகளுக்கு போப்பாண்டவரின் அங்கீகாரத்தை வேண்டினர். தொடக்கத்தில் போர்ச்சுகீசுக்கு பட்ரோடோ (போப்-ஆதரவு) இருந்தது; பட்ரோடோவில் இருந்து பல விஷயங்கள் வளர்ந்தன. இந்நிலை 500-ஆண்டுகள் நீடித்தது. மதச்சார்பற்ற ஆட்சியாளர்கள் அதிக வளங்களை விநியோகிக்க முடியும் என்று எண்ணிய போப், சுவிசேஷ பணிகளை அவர்களிடம் ஒப்படைப்பதில் மகிழ்ச்சி அடைந்தார். இதில் இரு தரப்புக்கும் நன்மை இருந்தது. எனவே, ஆரம்பத்திலிருந்தே இது ஒரு வசதிக்கான ஏற்பாடாக இருந்தது

கி.பி.1418, ஏப்ரல் 4ம் தேதியிட்ட போப் மார்ட்டின்-4 சுற்றறிக்கை அனைத்து விசுவாசிகளையும் தங்கள் ஆற்றலை பயன்படுத்தி அவிசுவாசிகளின் அழிவை தடுத்து அவர்களின் தவறுகள் நீக்கப்பட உதவிட வேண்டுமென அழைக்கிறது.

கி.பி.1442ல் போர்ச்சுகல் அரசரான இளவரசர் ஹென்றி, நேவிகேட்டரை கிராண்ட் மாஸ்டராக நியமித்து, 'கிறிஸ்துவின் ஒழுங்கு' (1319ன் நிறுவனம்) மற்றும் ஆப்பிரிக்காவிலும் கிழக்கிலும் பெற்ற மற்றும் பெறவேண்டிய அனைத்து வெற்றிகள் மற்றும் கண்டுபிடிப்புகளின் குறிப்புகள் அனைத்தையும் அவர் வசம் மாற்றினார். போப் யூஜீனியஸ்-4, கி.பி.1443 ஜனவரி 9ல் இதை உறுதிப்படுத்தினார். இந்த ஆவணத்தில்தான் அதிகார உரிமை பரிமாற்றத்தை நாம் முதலில் சந்திக்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி. 1452, ஜூன்-18ல் 'டம் டைவர்சஸ்' மற்றும் 'டிவினோ அமோர்' பிரகடனங்களில் போப் நிக்கோலஸ்-5 அனைத்து ராஜ்ஜியங்களையும் ஆக்கிரமிக்கவும், கைப்பற்றவும், அடக்கவும் போர்ச்சுகல் மன்னரின் அதிகாரத்தின் மூலம் அவிசுவாசி

களின் பிரதேசங்கள் மற்றும் மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் கத்தோலிக்க நம்பிக்கை அதிகரிக்கும்படி அதன் எதிரிகளை கீழ்ப்படுத்தவும் போர்ச்சுகல் அரசர் மற்றும் அவரது வாரிசுகளுக்கு உறுதியளித்தார்.

கி.பி.1456ம் ஆண்டு மார்ச் 13ம் தேதி கேடெரா. இது கேப்ஸின் தெற்கேயுள்ள அனைத்து பகுதிகளுக்கும் பொருந்தும் போஜடோர் மற்றும் நாம், கினியா முழுவதும் மற்றும் அதற்கு அப்பால் தெற்கு பகுதி இந்திய தீவுகள் வரை. இந்த முழுப்பகுதியும் மற்றும் சாதாரண அதிகார வரம்பின் அனைத்து உரிமை களும் கிராண்ட் ப்ரியர்க்கு மாற்றப்பட்டது. அனைத்து நாடுகளிலும் கேப் போஜடோர் முதல் இண்டீஸ் வரை, கிறிஸ்தவ ஆன்மீக அதிகாரத்தை உறுதிப் படுத்தியது. தேவாலயங்கள், மடாலயங்கள் மற்றும் பிற பக்தி-ஸ்தலங்கள் அனைத்திலும் கிறிஸ்து வென்றெடுக்கப்பட வேண்டும். மத அல்லது மதச்சார்பற்ற நபர்களுக்கு பேசும் அல்லது கேட்கும் உரிமை உண்டு. 'சாட்சி' பகர்தல் மற்றும் வெளிப்படையான நிகழ்வுகள் தவிர மற்ற எல்லா நிகழ்வுகளிலும் மன்னிப்பு வழங்க (ஹோலி சீ) அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினருக்கு ஆணை வழங்கப்பட்டது. திருச்சபை சடங்குகளின் சரியான அர்த்தம் விளங்கி ஊழியம் செய்ய (புல் இண்டரில்) இன்னும் தெளிவாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அதிகாரத்தின் இந்த செயல்முறை இன்னும் முடிவுக்கு வரவில்லை. கி.பி.1481, ஜூன் 21 அன்று சிக்ஸ்டஸ்-4 அறிக்கை போர்ச்சுகலின் அரசுக்கு முந்தைய போப்களின் பிரகடனங்களில் வழங்கப்பட்ட அனைத்து சலுகைகளையும் சுருக்க மாக மற்றும் தெளிவாக மறு உறுதிப்படுத்தியது. இந்த அறிக்கை போர்ச்சுகல் அரசர் பெயரைப் போற்றுவதாகக் கூறப்படுகிறது.

கிழக்குப் பகுதியில் போர்த்துகீசியர் கிட்டத்தட்ட வரம்பற்ற அதிகாரத்துடன். அவிசுவாசிகளுடன் சுதந்திரமாக வர்த்தகம் செய்யலாம். போர்த்துகீசிய அரசு பிற இடங்களைக் கண்டுபிடித்து தேவாலயங்கள் அமைக்கலாம். அத்தகைய இடங்களில் ஊழியம் செய்யும் மதகுருமாருக்கு முழு அதிகாரம் இருக்கும். போர்ச்சுகல் ஆட்சியாளர்கள் திறமையில் வேறுபட்டனர். திருச்சபையின் மீதான அவர்களின் பக்தியின் அளவு வெவ்வேறாக இருப்பினும், அவர்கள் அனைவரும் இளவரசர் ஹென்றிக்கு குறிப்பிடத்தக்க விசுவாசத்தைக் காட்டினர்.

**நேவிகேட்டர் - அவிசுவாசிகளின் மாற்றம் - திருச்சபையின் விரிவாக்கம**

குறிப்பாக போர்ச்சுகல் மன்னர்களால் பராமரிக்கப்படும் பொருட்களாக இருப்பின் கிழக்கின் நிலங்கள் மற்றும் அவர்களின் உறவுகளில், மிகக்குறைந்த அளவிற்கு அவர்களுக்கு வளங்கள் கிடைக்க மறைமுகமாக அனுமதிக்கப்பட்டது. இதில் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து பொதுவான உடன்பாடு இருந்தது. அரசர், ஆயர்களுக்கு கதீட்ரல்களின் நியதிகளை மட்டும் வழங்குவார். பாதிரியார் கள் அனைவரும் அரசு-சம்பளம் பெற்றனர். திருச்சபையின் ஆயர்-நியமனங்கள் அசரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் பல்வேறு மறைமாவட்டங்களில் பணியாற்றியவர்கள் பட்ரோடோ கிரீடத்தைப் பாதுகாத்து-பராமரிப்பதற்கு தங்கள்

உழைப்பைத் தருவதில் பொறுப்புடன் ஈடுபட்டனர். கிழக்கில் போர்த்துகீசியப் பணிகளின் கதையை எளிதில் புரிந்துகொள்ள முடியாது. எனினும் பட்ரோடோவை நிறுவும் பிரகடனங்களால் உருவாக்கப்பட்ட சக்திகளின் நுட்பமான சமநிலை தொடர்ந்து நம் மனதில் பதிகிறது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd., (Pope's College, Sawyerpuram)
Thiruvanmiyur, Chennai. South India

## வேதாகம போட்டி–156 சரியான பதில் அளித்தோர் பட்டியல்

....11ம் பக்கத் தொடர்ச்சி

167) செல்வராணி ஆல்பர்ட் CHE
168) செல்வி அமிர்தராஜ் TVR
169) ஷாலி எடிசன் CHE
170) சாந்தி ஆல்பர்ட் PCT
171) சாந்தி ஆசேர் TIN
172) சாந்தி ஜெயசீலன் CHE
173) சாந்தி ரோஸ் CBE
174) ஷேபா சந்தோஷ் CHE
175) ஷீபா சாம்ஸன் CHE
176) ஷீலா G. PNR-TVL
177) ஷெரீன் ஜெபராஜ் PAN
178) சவுந்தரம் சாலமோன் CHE
179) சவுந்தரி பிரபாகரன் TVL
180) ஸ்டெல்லா டேவிட் TUT
181) ஸ்டெல்லா கனகராஜ் CHE
182) ஸ்டெல்லா சூசைய்யா TUT
183) சுகிர்தா ஆல்வின் CHE
184) சுகிர்தா சின்னதுரை TIN
185) சுஜாதா சாமுவேல் CHE
186) சுமித்ரா B. CHE
187) சுந்தரிபாய் TUT
188) சுந்தரி அன்பழகன் TEN
189) சுசீலா தியோடர் TCY
190) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
191) தனசீலி ஞானராஜ் CHE
192) தாரா மாணிக்கம் CHE
193) தெல்மா ஸ்டேன்லி MDU
194) உமா குளோரி CHE
195) வனஜா ஹெர்பர்ட் TIN
196) வசந்தா அன்பன் TIN
197) வசந்தா சந்திரசேகர் CBE
198) வசந்தா துரைராஜ் TCY
199) வசந்தி கருணாகரன் CHE
200) வசந்தி வாசன் CHE
201) விஜி டேனியல் CHE
202) விண்ணரசி ரோஸ் CHE
203) வினோலியா ஜேம்ஸ் TUT
204) வினோலியா வில்சன் VAN
205) வைலட் கிறிஸ்டோபர் TIN
206) வைலட் சைரஸ் CHE

## வேதாகமப் போட்டி-155 சரியானபதிலளித்தோர்

1) ஜெமி ஜாய் பிளஸ்ஸி 2) ஜோஸ்.ஃபின் ஜெஸி 2) ரோஸி ஸ்டீபன்

## வேதாகம போட்டி–156 (மத்தேயு) சரியான விடைகள்

1. கப்பர்நகூம் மத்:-8:5
2. பூமியின் இருதயத்தில் மத்:-12:40
3. சீமோன் பேதுரு மத்:-16:16
4. மரியாள் மத்:-1:18
5. ஆவியானவர் மத்:-4:1
6. இயேசு... சீஷரிடம் மத்:-9:37
7. யோவான்ஸ்நானன் மத்:-17:13
8. பிள்ளைகள் மத்:-21:15
9. சரி மத்:-10:30
10. தவறு மத்:-24:28
11. தவறு மத்:-5:37
12. சரி மத்:-6:22
13. ஈ - மாம்சமோ மத்:-24:41
14. ஈ - ராஜாவுக்கு மத்:-22:2
15. ஆ - வியாபாரிக்கு மத்:-13:45
16. ஈ - ஏரோது ராஜா மத்:-2:3
17. இயேசு... யோர்தானுக்கு மத்:-3:13-16
18. பரலோக ராஜ்யம் மத்:-7:19-23
19. யோவான்ஸ்நானன் மத்:-11:11
20. இருதயத்திலிருந்து மத்:-15:19

**Good Tidings Bible-Prints Ministries**

**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்**

## Good Seeds - Gospel Tracts
## நல்ல விதைகள் - கைபிரதிகள்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! சுவிசேஷ ஊழியங்களின் பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம் மட்டுமல்ல சுவிசேஷ ஊழியம் செய்யும் அன்பர் களுக்கும் திருச்சபைகளுக்கும் கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு வகை கைப்பிரதியை வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதி களை Sponsor செய்து இயேசுவின் அன்பை அனைத்து மக்களும் அறிந்திட உதவிடுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

| No.&Title of the Tract | Sponsor's Name |
|---|---|
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | - Mr.A. Inbaraj, Kumbakonam |
| 20. மரணத்தின் சாலை - El Camino de la Muerte | - Mr. Frankline Christus, Ch-93 |

கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. கைப்பிரதிகளை எங்களிடம் இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை-93. தென்னிந்தியா.

**Ratchippu Tamil Monthly. Registered News Paper.**
**Date of Publication: First week of every month**
**RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.**
**Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.**
**Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th November 2023.**
**Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.**

# செய்தித்துளிகள்

1. கொரோனா மற்றும் பரஸ்பர உறவு பாதிப்பு காரணமாக 2020-ம் ஆண்டு நிறுத்தப்பட்ட ரஷ்யா-ஜப்பான் இடையேயான கப்பல் போக்குவரத்து (940கி.மீ தூர விளாடிவோஸ்டாக் - நானோ வாராந்திர சேவை) மீண்டும் தொடங்கப்பட்டது.

2. பாட புத்தகங்களில் 'இந்தியா' என்பதற்கு பதில் 'பாரத்' என்ற பெயரை மாற்றி பயன்படுத்தலாம் என தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் (என்.சி.இ.ஆர்.டி) உயர்மட்ட குழு பரிந்துரை வழங்கியுள்ளது.

3. கேரள அரசு அலுவலக பியூன் பணிக்கு பி.ஈ மற்றும் பி.டெக் பட்டதாரிகள் பலர் விண்ணப்பித்து, சைக்கிள் ஓட்டும் டெஸ்டிலும் பங்கேற்றனர். இப்பணிக்கான கல்வி-தகுதி 7ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் சைக்கிள் ஓட்டும் திறன் மட்டுமே.

4. இந்திய சிறு-வணிகர்களுக்கு 'சாஷே' கடன்களை வழங்குகிறது 'கூகுள்' நிறுவனம். கூகுள்பே-டி.எம்.ஐ. பைனான்ஸ கூட்டுத் திட்டத்தில் மாதம் ரூ.111 வட்டி செலுத்தும் வகையில் ரூ.15000 'சாஷே கடன் திட்டம்' அறிமுகம்.

5. புரோ-கபடி லீக் 10வது தொடர் ஆமதாபாத்தில் டிச-2ம் தேதி முதல் பிப்-2024 வரை நடைபெறுகிறது. 12-அணிகள் மோதும் இப்போட்டிகளை ஸ்டார்-ஸ்போர்ட்ஸ் நேரடி ஒளி பரப்பு செய்கிறது. இறுதிப்போட்டி மார்ச்-2024ல் நடைபெறும்.

Posted on: 10th November 2023

To

# குழந்தைகள் தினம்

**நல்வாழ்த்துக்கள்**

**இரட்சிப்பு** பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், கைப்பிரதி களப்பணியாளர்கள், திருச்சபை போதகர்கள், இறைமக்கள், இரட்சிப்பு-விசுவாச-குடும்பத்தார் அச்சகத்தார் மற்றும் தபால்-துறையினர் ஆகிய அனைவரின் இல்லங்களிலுள்ள குழந்தைகள் அனைவருக்கும் இனிய **குழந்தைகள் தினம்-2023 நல்வாழ்த்துக்கள்.**




**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்

If undelivered Please return to:
**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D.Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.